

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.77, சிவராவ் சாலையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 18.50 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் ரேஷன் கடை கட்டுமானப் பணியின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.



நேற்று (24.12.2025) திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி, வார்டு 74க்குட்பட்ட சேமாத்தம்மன் காலனியில் இந்து சமய அறநிலைத்துறை சார்பில், சேமாத்தம்மன் திருக்கோயில் புனரமைப்பு மற்றும் புதிதாக கோயில் மண்டபம் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதை மேயர் திருமதி ஆர்.பிரியா, இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையாளர் திருமதி ஜா.முல்லை முன்னிலையில், பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது பகுதி துணைச் செயலாளர் பெரம்பூர் ஆர்.ராஜன், வட்ட கழக செயலாளர் எஸ்.புஷ்பராஜ், வட்ட அவைத் தலைவர் த.வெங்கடேசன், கோவில் செயல் அலுவலர், உதவி பொறியாளர் மற்றும் மாநகராட்சி பொறியாளர் அலுவலர்கள் மற்றும் கழக உடன் பிறப்புகள் கலந்து கொண்டனர்.

### தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா – கே.நவாஸ் கனி எம்.பி.–யின்

# சகோதரர் சிராஜுதீன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, டிச. 25-**

**கழக தலைமை நிலையச் செயலாளர் - தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, கே.நவாஸ் கனி எம்.பி. ஆகியோரின் சகோதரர் சிராஜுதீன் நேற்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

இச்செய்தி அறிந்ததும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா மற்றும் இராமநாதபுரம் மக்களவைத் தொகுதி உறுப்பினரும், தமிழ்நாடு வக்ஃபு வாரியத் தலைவரும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாநிலத் துணைத் தலைவருமான கே. நவாஸ் கனி ஆகியோரின் சகோதரர் சிராஜுதீன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருந்தினேன்.

அன்புச் சகோதரரை இழந்து தவிக்கும் துறைமுகம் காஜா, நவாஸ் கனி ஆகியோருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### டிசம்பர் 27, 28 – ஜனவரி 3, 4 ஆகிய 4 நாட்கள் நடைபெறும் வாக்காளர்கள் சேர்ப்பு

# சிறப்பு முகாமில் விடுபட்ட புதிய வாக்காளர்களை சேர்த்திடும் பணியில் கழகத்தினர் மும்முரமாக ஈடுபடுவீர்!

## திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகத்தினருக்கு - மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



திருவள்ளூர் டிச 25;-

திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள 2 சட்டமன்றத் தொகுதிகளிலும் வரைவு வாக்காளர் பட்டியலை பிரித்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மூலம் வழங்கப்பட்டு, அந்த வரைவு வாக்காளர் பட்டியல் பி.எல்.ஏ.2, வசம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

அந்தந்த பூத் பி.எல்.ஏ. 2. பி.டி.ஏ. பி.எல்.சி. மற்றும் கழகத்தினர் அனைவரும் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியலை சரி பார்த்திடும் இன்றியமைப் பணியில் இன்று முதல் ஈடுபட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். பூத் வாரியாக வாக்காளர் பட்டியலை கழகத்தினர் அனைவரும் சரி பார்த்து எஸ்.ஐ.ஆர். படிவம் தந்தும் வரைவு வாக்காளர் பட்டியலில் விடுபட்ட வாக்காளர்களையும், வாக்காளர் பட்டியல் பெயர் இருந்தும் எஸ்.ஐ.ஆர். படிவம் கிடைக்கப் பெறாத வாக்காளர் பட்டியலையும், மற்றும் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களையும் கண்டறிந்து மொத்தத்தில் ஒவ்வொரு பாகத்திலும் நம்முடைய கழக வாக்காளர், கழக ஆதரவு வாக்காளர் எவர் பெயரும் விடுபடாத வகையில் அனைவரையும் படிவம் 6 -ல் வாக்காளர்களாக சேர்த்திடும் முக்கிய பணியில் மும்முரமாக ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இறந்த - இடம் மாறிய வாக்காளர்களின் பெயர்கள் மீண்டும் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று இருந்தால் அவர்களின் பெயர்களை படிவம் 7 -ல் நீக்கிடும் பணியில் உடனே ஈடுபட வேண்டும். இந்நிலையில் இந்திய தேர்தல் ஆணையம் விடுபட்ட வாக்காளர்கள் புதிய வாக்காளர்களை சேர்ப்பதற்காக வருகிற டிசம்பர் 27, 28 மற்றும் ஜனவரி 3, 4 ஆகிய 4 நாட்கள் சிறப்பு முகாம் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது. தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தியதின்படி வருகிற டிசம்பர் 27, 28 மற்றும் ஜனவரி 3, 4 ஆகிய நான்கு நாட்கள் நடைபெறும் வாக்காளர்கள் சேர்த்து சிறப்பு முகாம்களில் கழகத்தினர் அனைவரும் கடுமையாக உழைத்து வாக்காளர் பட்டியலில் பெயர்கள் இருந்தும் எஸ்.ஐ.ஆர். படிவம் கிடைக்க பெறாதவர்கள், எஸ்.ஐ.ஆர். படிவம் தந்தும் வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர்கள் விடுபட்டவர்கள். மேலும் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களை சேர்த்திடும் இன்றியமையா முக்கிய பணியில் மும்முரமாக ஈடுபட்டு முனைப்புடன் செயல்பட வேண்டும் என்று அன்புடன் கேட்டு கொள்கிறேன் என மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிக்கை வாயிலாக தெரிவித்து கொண்டார்


## தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 304 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Head pulley assembly Take up pulley Tension roller assembly Bearing housing for 36 gravimetric |
| 306 | மே.பொ /கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Design Manufacturing and Supply of Economiser coil tubes and bends with supporting |
| 308 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Spares for Travelling Water Screens of CWPs |
| 309 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Design Manufacturing and Supply of water wall tube water wall Screen tube Straight |
| 313 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Various types of fire extinguishers for fire protection system |
| 314 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Hanger support plates of various size for Eco coils in Unit-II |
| 316 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | 150 NB Seamless pipes for ECHS yard no3 fire hydrant line |
| 317 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | 150 NB Seamless pipes for ECHS yard no2 fire hydrant line |
| 324 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | 150 NB Seamless pipes for ECHS yard no4 fire hydrant line |
| 326 | மே.பொ/கொ&நி/ வ.செ.அ.மி.நி-1 | 200 NB Seamless pipes for ECHS Conveyor BCN 54 fire hydrant lines |
| 328 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | 150 NB Seamless pipes for ECHS conveyer BCN 59 fire hydrant lines |
| 327 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | 150 NB Seamless pipes for ECHS yard no1 fire hydrant line |
| 322 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Pipe bottom support for Cooling Water Pumps |
| 138 | மே.பொ / சி.பரா. / வ.செ.அ.மி.நி-1 | Providing potable water for drinking water to Athipattu Camp at NCTPS-I |
| 249 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | Procurement of S188 model Plate heat exchangers channel plates and end plate for SG PHE 1D |
| 255 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | Procurement of S188 model Plate heat exchangers channel plates and end plate for SG PHE 1E |
| 278 | மே.பொ /இ-I / வ.செ.அ.மி.நி-1 | Unit III Providing of insulation for PA SA duct APH outlet slope area A B pass during AOH 2025 - 26 |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tntenders.gov.in/nicgep/app, www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in**

**செ.ம.தொ.இ/6824/ஒப்பந்தப்புள்ளி/2025**


### தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியில்

# மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் கண்டன உரை!

தருமபுரி, டிச. 25 -

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான ஆணைக்கிணங்க, தருமபுரி மேற்கு மாவட்டத்தில் பாப்பிரெட்டிப்பட்டி, கடத்தூர், தருமபுரி, காரிமங்கலம் மற்றும் பாலக்கோடு ஆகிய 5 ஒன்றியங்களில் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பாப்பிரெட்டிப் பட்டி, வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பெற வலியுறுத்தியும், இச்சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்தும், அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.கவைக் கண்டித்தும் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர் பி.பழனியப்பன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்பாட்டத்தில் 19 ஊராட்சியை சார்ந்த 100 நாள் வேலை திட்ட பயனாளிகள் 3000 நபர்கள் கலந்து கொண்டு ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து கண்டன முழக்கங்கள் எழுப்பினர்.

இக்கண்டன பேருரையில் மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளியோர் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதையும், தமிழ்நாட்டிற்கு ஏற்படும் நிதிச்சுமை மற்றும் பாதிப்புகள் குறித்து உரையாற்றி கண்டன முழக்கங்கள் எழுப்பினர்.

இக்கூட்டத்தில் மதச்சார்பற்ற கூட்டணியின் திராவிடர் கழகம் சார்பில் கு.தங்கராசு, பொன்.அய்யனார், இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் வேலன், வி.சி.க சார்பில் J.K.தமிழ்அன்வர், அதியமான், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் S.கமலாமூர்த்தி, M.மணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் முத்து, ம.தி.மு.க சார்பில் சுகவனம், குமரவேல், கொ.ம.தே.க சார்பில் தவமணி, சக்திவேல், ராஜா, மனிதநேய மக்கள் கட்சி சார்பில் ஏ.அஸ்லாம், தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பில் முனியப்பன், இந்திய தேசிய முஸ்லீம் லீக் கட்சி சார்பில் எஸ்.சஜீர் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி, தலைமை செயற்குழு உறுப்பினர் ரா.சித்தார்த்தன், பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றிய தி.மு.க. செயலாளர்கள் சி.முத்துக்குமார், பி.எஸ். சரவணன், பேரூர் கழக செயலாளர்கள் கொ.ஜெயச்சந்திரன், கு.கௌதமன், பேரூராட்சி தலைவர் எம்.மாரி மற்றும் கழக நிர்வாகிகள், மதச் சார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.

## தி.மு.க. மகளிர் அணி

# கோவை வடக்கு மாவட்ட தலைவர், துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு கோவை வடக்கு மாவட்டம் மறுசீரமைக்கப்பட்டதால் ஏற்கனவே மகளிர் அணி மாவட்ட தலைவராக நியமிக்கப்பட்ட ராணி அவர்கள் திருப்பூர் வடக்கு மாவட்ட நிர்வாகத்தில் வருவதால் அவருக்கு பதிலாக **பி. மலர்விழி** (1டி, மேற்கு சித்திரைசாவடி, உலியம்பாளையம், தீனம்பாளையம் அஞ்சல், தொண்டாமுத்தூர் மெயின் ரோடு, கோவை 641109) அவர்கள் கோவை வடக்கு மாவட்ட மகளிர் அணி தலைவராக நியமிக்கப்படுகிறார். மேலும், துணை அமைப்பாளர்களாக,

1. **கி. சாவித்திரி**
   10/44, மாரியம்மன் கோவில் வீதி,
   பூச்சியூர், என்.எஸ்.என். பாளையம்,
   கோவை - 641031
2. **எம். உமா மூர்த்தி**
   38, வெள்ளிப்பாளையம் ரோடு,
   மேட்டுப்பாளையம் - 641301,
   கோவை. ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18.
நாள் : 24.12.2025.

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி

### இடைக்கழிநாடு பேரூராட்சி

# கப்பிவாக்கம் 16-வது வார்டில் விசைக் குழாய் அமைக்கும் பணி!

## மன்ற உறுப்பினர் பொறியாளர் பெ.பிரபு துவக்கி வைத்தார்!

சென்னை, டிச.25-

மாவட்ட கழக செயலாளர் வழிகாட்டுதலின் பேரில், பேரூராட்சி தலைவர் உதவியுடன், காஞ்சி தெற்கு மாவட்டம், இடைக்கழிநாடு பேரூராட்சி வார்டு 16 கப்பிவாக்கம் கிராமத்தில், ஸ்ரீ கெங்கை அம்மன் கோவில் சாலையில் இருந்து விவசாய நிலம் செல்லும் சாலை அருகில் சிறிய விசை குழாய் (மினி பவர் பம்ப்) 15-வது நிதிக்குழு நிதியிலிருந்து ரூபாய் ஐந்து லட்சம் மதிப்பீட்டில் இரு இடங்களில் அமைக்கும் பணிக்கான தொடக்க விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் பொறியாளர் பெ.பிரபு (எ) ஜெயலட்சுமணன் இப்பணியினை துவக்கி வைத்தார்.

மேலும், அவைத்தலைவர் தயாளன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிளை கழக செயலாளர் வி.முனுசாமி, துணை செயலாளர் எஸ்.இளையராஜா, பெ.பாக்கியராஜ், பொருளாளர் என்.ராஜ்குமார் (எ) அப்பேன், மூத்த கழக முன்னோடி தர்மகாந்தன், பார்த்திபன், கமலக்கண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

# சேலம் மத்திய மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு

சேலம் மத்திய மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட இளந்திரையன் அவருக்கு பதிலாக

**அ. அபு (எ) மஹபூப் அலி** (67/6, பி.சி. பழைய மார்க்கெட் தெரு, முகமதுபுறா, சேலம் - 1) அவர்கள் சேலம் மத்திய மாவட்ட கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 24.12.2025.

**வாகை சந்திரசேகர்**
தலைவர்
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

### ஜி.துக்காராம் பங்கேற்பு:

# மாதவரம் 30 (அ) வட்டத்தில் பாக வாரியாக கூட்டம்!

## வட்டச் செயலாளர் டி.சுந்தரம் அறிவிப்பு!

சென்னை, டிச.25-

என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பாகம் 123, 124-இல் பாக வாரியாக நடைபெறும் பரப்புரை கூட்டத்தில் ஜீ. துக்காராம் பங்கேற்கிறார் என்று டி.சுந்தரம் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இன்று (25.12.2025 வியாழக்கிழமை) மாலை 5.00 மணிக்கு பி.ஆர்.எச். ரோடு ஆக்ஸிஸ் பேங்க் அருகில் செகரட்டரி காலனி, லட்சுமிபுரம் என்ற முகவரியில் சென்னை வட கிழக்கு மாவட்டம், மாதவரம் தெற்குப் பகுதி, 30 'அ' வட்டக் கழகத்தில் அடங்கிய 123, 126 பாகங்களுக்கு என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற களப்பணியில் பகுதி கழக செயலாளர் ஜி. துக்காராம் தலைமையில் பரப்புரை கூட்டம் நடைபெறுகிறது.

எனவே வட்ட கழக நிர்வாகிகள், பகுதிக் கழக பிரதிநிதிகள், அமைப்பாளர்கள், சார்பு ஒன்றிய நிர்வாகிகள், மகளிர் அணியினர் மற்றும் கழக முன்னணியினர் . BLA.2.BLD.BLY.BLC. மற்றும் இளைஞர் அணியினர், பொறியாளர் அணி, மகளிர் அணியினர், தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்திட வட்டக் கழக செயலாளர் டி.சுந்தரம் கேட்டுக்கொண்டுள்ளார்.


## பெருநகர சென்னை மாநகராட்சி

மின்துறை

மி. து. ந. க. எண். மே2 / பி10 / 5458 / 2025

**குறுகியகால மின் ஒப்ப அறிவிப்பு**

**Supply and operation of 2000 nos. of GSM SIM card under Closed User Group plan in Greater Chennai Corporation for a period of one year**

இப்பணிக்கான தோராய மதிப்பு : **ரூ. 70,51,680/-** முன் வைப்புத் தொகை : **ரூ.70,517/-**

ஒப்பந்ததாரர்கள் **https://tntenders.gov.in** இணையதளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்துகொண்டு மின் ஒப்பத்தில் **02.01.2026** பிற்பகல் **02.15** மணிக்குள் பங்கேற்கலாம், **02.01.2026** பிற்பகல் **3.15** மணிக்கு ஒப்பங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 6820 / ஒப்பந்தப்புள்ளி / 2025

**கண்காணிப்பு பொறியாளர் / மின்துறை**




பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.செயற்குழு கூட்டம் பகுதி கழக செயலாளர், மண்டலம் குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி ஏற்பாட்டில் அவைத் தலைவர் ப.காளேஸ்வரன் தலைமையில் பா.டில்லி வரவேற்புரையில் ஆர்.உமாசங்கர், என்.பன்னீர்செல்வம்,துரை இளங்கோவன்,பா.கவிதா, பி.ஜே. வேந்தன்,இரா.கந்தவேலு, என்.கே.ரவிச்சந்தின்,சு.மனோகர், ஆர்.கோகுல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது கூட்டத்தில் எஸ்.ஐ.ஆர். பணிகள் சரிபார்த்தல், பூத் வாரியாக கமிட்டி கூட்டம் நடத்துவது, புதிய வாக்காளர் பட்டியல் சரிபாத்தல், மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. இதில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## தி.மு.க. மகளிர் அணி

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளராக திருமதி. **ஆர். கலைவாணி** (19, காமராஜ் நகர், 2வது தெரு, கே.ஏ.பி. திருமண மண்டபம் பின்புறம், ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 24.12.2025.

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி



ஆலந்தூர் தெற்கு பகுதி 167 வது வார்டில் உள்ள 379 வது பாகம் மற்றும் 387 வது பாகம் ஆகிய பாகங்களில் என் வாக்கு சாவடி வெற்றி வாக்கு சாவடி ஆலோசனைக் கூட்டத்தில் பாகம் முகவர்கள் எஸ். ஸ்ரீகாந்த் (379) எம். அரசு (387) ஆகியோர் தலைமையில் ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12வது மண்டல குழு தலைவருமான, என். சந்திரன், கலந்துகொண்டு வாக்கு சாவடி பூத் உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் 167வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், 167 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி துர்கா தேவி நடராஜன், மாவட்ட நிர்வாகிகள் வி. ரமணா, அபிஷே கிருஷ்ணா, பிரான்சிஸ், மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.